

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

*அ.எண் :116/2016*
*தேதி. 03.07.2016*

## "நதிகளை தேசிய மயமாக்கி, தொடர்ந்து நிலவி வரும் நதி நீர் பங்கீடுகள் குறித்த பிரச்சனைகளில் மத்திய அரசு தலையிட்டு தமிழகத்திற்கு நிரந்தர தீர்வு வழங்க வேண்டும்" அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனர் - தலைவர் திரு ஆர் சரத்குமார் அறிக்கை

வேலூர் மாவட்டம் வாணியம்பாடிக்கு அருகில் புல்லூர் கிராமத்தில் ஆந்திர - தமிழக எல்லை பகுதியில் உள்ள பாலாற்றில் 5 அடியாக இருந்ததை 12 அடியாக உயர்த்தி தடுப்பணை கட்டியிருக்கும் ஆந்திர அரசின் செயல் கண்டனத்துக்குரியது.

தமிழக முதலமைச்சர் ஆந்திர முதல்வருக்கு எழுதியிருக்கும் கடிதத்தில் பாலாறு வடதமிழகத்தின் குடிநீர் ஆதாரமாக இருப்பதையும், ஏறத்தாழ 5 லட்சம் ஏக்கர் விவசாய நிலம் பாசன வசதி பெறுவதையும், கல்பாக்க அனல் மின் நிலையம் பயன்பெறுவதை பற்றியும் விளக்கி, 1892 ஆம் ஆண்டு மெட்ராஸ் - மைசூர் ஒப்பந்ததை பற்றி குறிப்பிட்டு உயர்த்தப்பட்டுள்ள தடுப்பணைக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது பாராட்டுக்குரியது.

தமிழகத்திற்கும் அண்டை மாநிலங்களுக்கும் நீண்ட காலமாக நீர்நிலை பங்கீடு மற்றும் உரிமை குறித்து சச்சரவுகளும் போராட்டங்களும் நிகழ்ந்து வருகின்றன.
பல வருடங்கள் முன்னரே இது குறித்து நான் என் கருத்தை பதிவு செய்ததை இன்று நினைவு கூற விரும்புகிறேன். நதிகளை தேசியமயமாக்குதல் மட்டும் தான் இந்த பிரச்னைக்கு தீர்வாக அமைய முடியும் என்ற என் கருத்தை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

இந்தியாவின் முதுகெலும்பு விவசாயம், மனிதன் வாழ்வதற்கு தேவையான குடிநீர் என அனைத்து அடிப்படை தேவைகளுக்கும் நதிநீரை மேலும் காலம் கடத்தாமல் பொதுவுடைமையாக்குதல் அவசியம். பின்னர் நதி நீர் இணைப்பு, அவற்றின் பங்கீடு என அனைத்தும் சாத்தியப்படும்.

நாட்டில் உள்ள அனைத்து நீர்நிலைகளையும் மிக விரைவில் தேசியமயமாக்குதல் மிக மிக அவசியம் என்று கருதுகிறேன்.

பல்லாயிரக்கணக்கான கிலோமீட்டர் தொலைவில் உள்ள செயற்கைகோள் பாதையை சரியாக குறிவைத்து வளர்ந்த நாடுகளுக்கு இணையாக ஆராய்ச்சி செய்து செயற்கை கோள்களை அனுப்பும் அளவுக்கு நமது இந்திய நாடு வளர்ந்துள்ளது. வேற்று கிரகத்தில் நீர் நிலை குறித்து ஆராய்ச்சி செய்து அறிக்கை விடும் மனித குலம், நாம் வாழும் பூமியில் உள்ள நீர்நிலைகளை சரியான வகையில் நிர்வகித்து அடுத்த சந்ததியருக்கு இதை பரிசளிக்க வேண்டும். இதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுப்பதற்கு மத்திய அரசு திட்டமிடல் வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

ஆர்.சரத்குமார் B.Sc
தலைவர்